F-33



ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

क्रियन्तो नाभूवन् हृदयपरमप्रेमविषया:
पुरा जन्मस्वद्य क्व गतमिति जानासि किमु तान् ।
वृथा मोहं बन्धुष्वहितपरिणामं त्यज सखे यदा
सेवादोषात् स्मरसि न कदापि स्मररिपुम् ॥

கியந்தோ நாபூவந் ஹ்ருதயபரமப்ரேமவிஷயா:
புரா ஜந்மஸ்வத்ய க்வ கதமிதி ஜாநாஸி கிமு தாந் ।
வ்ருதா மோஹம் பந்துஷ்வஹிதபரிணாமம் த்யஜ ஸகே
யதா ஸேவாதோஷாத் ஸ்மரஸி ந கதாபி ஸ்மரரிபும் ॥

ஹே ஹ்ருதய! ஹே சித்த முன் ஜன்மாக்களில் உனக்கு மிகவும் பிரியங்களான எவ்வளவு விஷயங்கள் அனுபவிக்கப்படவில்லை, எவ்வளவோ கணக்கில்லாத ஸ்திரீகளும் ஆபரணங்களும் வீடுகளும் பூமிகளும் பொருள்களும் மற்றுமுள்ளவைகளும் அனுபவிக்கப்பட்டிருக்கின்றன. அவ்விதம் அனுபவிக்கப்பட்ட விஷயங்களை இப்பொழுது நீ அறியவில்லையா? பந்துக்களிடத்தில் வீண் மோகம் வேண்டாம். ஹே மித்ர முடிவில் துக்கத்தைக் கொடுக்கும் இந்த மோஹத்தை விட்டுவிடு யாதொருவிஷயத்தில் அதிகமான பற்றுதலை வைத்துக்கொண்டிருக்கும் தோஷத்தால் ஸம்ஸார துக்கத்தைப் போக்கடிப்பவரான ஸ்ரீ சந்திரசேகரனை ஒரு ஸமயமும் நீ ஸ்மரிக்கவில்லை, இதினால் ஜன்மாவீணாகின்றது.

மானிடப் பிறவியைப் பெற்றவர்கள் பவமென்று பெயர் வாய்ந்த பெரும் பிணியைப் போக்கவேண்டி பகவானுடைய அனுக்கிரகத்தைப் பெறவேண்டியது முக்யமாகையால் அதற்கு வேண்டிய பகவானுடைய அர்ச்சனம் முதலான ஸாதனங்களையே எப்பொழுதும் அனுஷ்டித்து வரவேண்டும். அவ்விதமின்றி துக்கத்திற்குக் காரணமான விஷய சுகங்களை அனுபவிப்பதில் பற்றுதலுள்ளவர்களாயிருப்போமாகில் இவ்வுலகிலும் பரலோகத்திலும் அதிக கஷ்டத்தையடையும்படி நேருவதுடன் சிறந்ததான மனுஷ்யஜன்மாவும் பயனற்றதாகுமென்று அறிவிக்கிறார்.

உபபத்திராதிபர்.

534

ஆர்ய தர்மம்.
பிரபவ-௵ புரட்டாசி-௴ ௨௭௨

# ஹரிஹராபேதம்.

(500-வது பக்கத்தொடர்ச்சி)

அந்த சமயத்தில் பண்டிதர்களோடுகூட சிவபக்தனும், குரோதமில்லாதவனும், வேதியர்களுக்குப் பணிவிடை செய்ய வேண்டுமென்ற இச்சை கொண்டவனுமான தர்மகுசலன் என்று பெயர்வாய்ந்த ஓர் சூத்ரன் அங்கு விளங்கும் விருபாக்ஷதேவரை வந்தனம் செய்யும்பொருட்டு வந்தான். உடனே விதிப்படி, ஸ்ரீ விருபாக்ஷரை தர்சித்து அவர் ஸந்நிதியில் நியமத்துடன் தியானத்தில் வீற்றிருக்கும் ஸுசாந்தர் என்கிற பெரியாரைக் கண்ணுற்றான். உடனே அவரிருக்கும் நிலைமையைப் பார்த்ததும் அதிக ஆனந்தத்துடன் இம்மஹானுக்குசுச்ரூஷைசெய்யவேண்டுமென்று தோன்றி அவருக்குப் பணிவிடை செய்துகொண்டு மிகவும் நியமத்துடன் நூறு வருஷ காலம் அவர் ஸமீபத்திலேயே வஸித்துவந்தான். இவ்விதம் நியமத்துடன் தவம்புரியும் வேதியரிடம் கருணைகொண்ட விருபாக்ஷர் சந்தோஷத்துடன் அவருக்கெதிரில் தோன்றி

सुशान्त श्रुणु मद्वाक्यं तपसा तोषितोऽस्म्यहम् ।
परं वरय भद्रं ते विद्धि भूतपतिं च माम् ॥

ஸுஶாந்த ஶ்ருணு மத்வாக்யம் தபஸா தோஷிதோஸ்ம்யஹம்।
வரம் வரய பத்ரம் தே வித்தி பூதபதிம் ச மாம்॥

ஹே ஸுசாந்த! என் வார்த்தையைக்கேள்: உன்தவத்தால், நான் ஸந்தோஷமடைந்தேன். என்னைப் பூதபதியான ஸ்ரீபரமேசுவரனாக அறிந்துகொள். உனக்குச்சுபம் உண்டாகட்டும், வேண்டிய வரனைக்கேட்டுக்கொள்- என்று சொன்னார்.

இவ்வசனத்தைச் செவியுற்ற அந்தணர் அடங்கா மகிழ்ச்சி கொண்டு பரமனைப் பன்முறை பணிந்து அடியில் வருமாறு போற்றினார்.

பார்வதி நாதராயும் திங்களை முடியிலலங்காரமாகத் தரிப்பவரும், ஸகல ஜகத்ரூபமாயும், சைதன்யரூபமாயும், நீலகண்டராயும் விளங்கும் உம்மையும் பொருட்டு அடிக்கடி வந்தனம் செய்கின்றேன் என்று பலவாறாகத் துதிக்கப்பட்ட ஸ்ரீ மஹேச்வரன் ஸகல தேவதைகளுடன் அதிக ஸந்தோஷத்தையடைந்து, மறுபடியும் அந்த ப்ராமணனைப் பார்த்து உமக்கு வேண்டிய வரனைக் கேளும் என்று கூறி, அவனருகில் மிகவும் பக்தியுடன் நிற்கும் சூத்திரனையும் பார்த்துத் திருப்தியுடன் உதயகிரியில் கதிரவன்போல் பிரகாசித்துக்கொண்டிருந்தார். உடனே அவ்வேதியர் பகவானை நோக்கி ஸ்வாமிந்! ஸமீபத்திலிருக்கும் சூத்திரருக்கும் எனக்கும் ச்ரேயஸ்ஸையுண்டுபண்ண வேண்டுமென்று ப்ரார்த்தித்தார். ப்ராமணரின் அபிப்ராயத்தை அறிந்த ஸ்ரீ பகவான் புன்சிரிப்புடன், சூத்திரனுக்கு மறுபிறப்பில் வேண்டியதை அளிக்கிறோம், உமக்கு வேண்டியதை இப்பொழுது கேளுமென்று மொழிந்தார். இதைக் கேட்ட விப்ரனும் அவ்விதமேயாகட்டுமென்று அங்கீகரித்துத் தாமும் மறுஜன்மத்தில் அவனுடன்கூடவே வேண்டியதைப் பெற்றுக்கொள்ளுகிறேன்என்று அறிவித்துக்கொண்டு. பிறகு, எனக்குப் பணிவிடைசெய்துகொண்டுவரும் இந்த சூத்திரன் தங்களுடைய லோகத்தைஎப்படி அடைவன். அவனை, சீக்கிரம் அவ்விதம், அடையும்படி செய்யவேண்டுமென்று, மறுபடியும் பிரார்த்தித்து நமஸ்கரித்துவிட்டு, ஸகலசுபங்களையும் கொடுக்கும், பஞ்சாக்ஷரமென்கிற மஹாமந்திரத்தை ஜபித்துக்கொண்டு பக்தியுடன் நின்றுகொண்டிருந்தார். மறுபடியும், ஸ்ரீபரமேசுவரன், ஹே ப்ராம்ஹண சிரேஷ்டா உமது விருப்பப்படியே செய்கின்றேன் அடுத்தஜன்மாவில், இந்த சூத்திரனுக்கு, நீர் சத்துருவாகஜனிக்கப்போகின்றீர்.

(தொடரும்) உபபத்திராதிபர்

---

# மதமும் மானிட வாழ்க்கையும்.

(560-வது பக்கத்தொடர்ச்சி)

இனி அவர்கள் கூற்றைப் பாருங்கள். அன்யநாட்டுப் பிரயாணம் செய்பவர்கள் அன்னாட்டு நிலைமையையும் நம்நாட்டு நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு தாம் அவ்விதம் செய்ததில் இந்நாட்டில் ஸ்திரீ புருஷர்கள் எவ்வ

536



ளவு சுறுசுறுப்பாக இருக்கவேண்டுமோ அவ்வளவு இல்லையென்றும் அங்கு சுறுசுறுப்பாய் இருக்கிறார்களென்றும் கண்டுகொண்டாராம். என்ன அத்புதம்? இங்கு எவ்வித சுறுசுறுப்பு முன் இருந்தது? எவ்விஷயத்தில் அது குறைந்திருக்கிறது. மொத்தமாய்க் கூறினால் அர்த்தமுண்டா? ஆனால் அங்கு சுறுசுறுப்பென்றால் எல்லோரும் உட்டை, பூட்ஸ், தொப்பி தரித்துமோட்டார்களில் வேலை முதலியதற்காக சுறுசுறுப்பாய் ஓடிக்கொண்டிருப்பார்கள். இங்கு அவ்விதம் மோட்டார் போதாது மற்றபடி அவரவர்கள் கார்யத்தில் சுறுசுறுப்பாய்க் கவனம் செலுத்தித்தான் வருகின்றனர். இனி ஆசார்யார் அதை நிலைநிறுத்துவதற்காக, சுறுசுறுப்பில்லாக் காரணம் மூன்றென்று விரிக்கிறார். உண்மையில் ஆசார்யருக்கு இந்துமதத்தைப் பழித்தாகவேண்டிய ஸங்கல்பம். அதற்காக நேரேயே மதத்தைப்பற்றிச் சொன்னால் ஆஸ்திகளுக்குக் கோபம் வருமென்று கொண்டு எங்கெங்கோ சுற்றுகிறார். மதம்தான் சுறுசுறுப்பின்மைக்குக் காரணமென்று சொல்வதற்குப் பதிலாக தற்கால நிலைமை காரணமா? அல்லது நமது வாழ்க்கைமுறை காரணமா? அல்லது நமதுமதம் காரணமா? என்கிறார். இவர் நமது மதத்தைப் பழிக்கவே முதலில் சங்கித்த 2-யும் விட்டு மதத்தையே பிடித்துக்கொண்டார். சுறுசுறுப்பின்மைக்குத் தற்கால நிலைமை காரணமென்று சொல்லமுடியாதா? அல்லது நமது வாழ்க்கைமுறைகாரணமென்றுதான்கூறலாகாதா? அல்லது சுறுசுறுப்பின்மையென்பதில்லை என்றுதான் சொல்வது பொருந்தாதோ? ஒன்றுமில்லாமல் பட்டிக்குருடன் யானை கண்டதுபோல் ஆஸ்டிரேலியா ஒன்றைப் பார்த்துவிட்டு அதுதான் சிரேஷ்ட உலகம். அம்மனிதர்கள்தான் மனிதர்கள், அவர்கள் வேலையே வேலை என்பதற்காக நம்மதமா அகப்பட்டுக்கொண்டது, பாருங்கள்! இந்தியாவில் இப்பொழுது அர்த்தமில்லாமலும் பொருந்தாமலும் மதச் சடங்குகள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றனவென்கிறார். இவ்விதம் ஆசார்யர் சொல்வதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா? சற்றேனும் பொருந்துமா? நம் மதச்சடங்குகள் அர்த்தமில்லாமலும்பொருத்தமில்லாமலும் ஒன்றுகூட இல்லை. இதன் விஷயமாய் ஆசார்யர் பால்யம் முதலிலேயே நம் மதவாஸனையற்றிருக்கிறாரோவென்று ஊகிக்க நேருகிறது. எம்மதத்தில் தானாகட்டும், அர்த்தமும் பொருத்தமும் இருக்கிறதாய்த்தான் ஸாதிப்பார்கள். ஒவ்வொரு கன்மாவுக்கும் அர்த்தமும் வினியோ

537



களும் பலனும் தனித்தனி ஏற்பட்டிருக்கிறதென்பதை ஆசார்யர் ஆஸ்திகனிடமாவது தெரிந்துகொள்ளட்டும். ஸத்தியம் ஒழுக்கம், தைர்யம் என்ற மூன்றுதான் மதத்திற்கு அடிப்படையான தத்துவங்களாம். இது உண்மை. ஆனால் ஆசார்யர் இம்மூன்றிற்கும் என்ன அர்த்தம் கொண்டிருக்கிறாரோ? ஸத்தியம் ஒழுக்கம் தைர்யமென்பதைப் பகுத்துப்பகுத்து விரிவாய் அறியவேண்டும். இம்மூன்றையும் உள்ளபடி அறிந்து கைக்கொண்டு அனுஷ்டித்தால் அவன்தான் எல்லோரிலும் மகான், அவனுக்கு ஈசன் வசப்படுவான். அவனுக்கு ஈசன் தொண்டுபுரிவான். ஆசார்யர் இம்மூன்றுபெயரை மட்டிலும் ஸாமான்யமாய்க்கேட்டு வாக்கால் கூறிவிட்டார். கொலைபாதகனொருவன் ஓர் ஸாதுவைக் கொல்ல வெருட்டிவரும்போது ஒடி ஒளிந்துகொண்டான். அப்போது ஸத்யவாதி ஒருவனைப் பார்த்து ஓடிவந்தவனெங்கே என்றால் இங்குதான் ஒளிந்திருக்கிறானென்று உண்மையைச் சொன்னான். இந்த ஸத்தியம் ஸத்தியமா? இதனால் ஸத்தியமென்றால் உள்ளதைச் சொல்வதென்பதில்லை. அதற்கு இலக்கணம் வேறுண்டு என்று தெரிந்துகொள்ளவேண்டும். தைர்யமென்றால் எவன் வந்தாலும் எதிர்த்து அடித்துவிடுவதென்பதா? பயப்படாமல் தீயத்தொழிலையும் புரிவதா? வரம்பு கவனியாமல் தாய் தந்தையரையும் இகழ்வதா? என்னென்றுரைப்பது? ஆகவே அதற்கு ஓர் இலக்கணம் கூறல் வேண்டும். இவ்விதம் ஒன்றுமில்லாமல் இம்மூன்றும் அடிப்படையாம். மதத்தைப் பழித்துவிட்டு இம்மூன்றும் எவ்விதம் எதில் நிற்குமோ தெரியவில்லை. வீணில் வளர்ப்பானேன்! இனி இம்மாதிரி தேசாந்திரப் பிரியர்களைக் கூப்பிட்டு நம்மத தத்துவத்தை உபன்யஸிக்க இடம் கொடுக்கக்கூடாதென்பதை யாவருமறியவேண்டுமென்பதே எமது கோரிக்கை. மத ரகஸ்யமும் மதத்தின் மகிமையும் இத்தகையோருக்குத் தெரிய நியாயமுண்டா? தேசாந்தரம்செல்ல ஆரம்பிக்கும் பிராமணன் முதலில் நம் மதத்தில் நிஷேதமிருக்கிறதைக் கேழ்வியுற்றும் அது பழஞ்சுவடி என்று அலக்ஷ்யமாய் மதத்தைப் புறக்கணித்துவிட்டல்லவா வீட்டைவிட்டு வெளியேறவேண்டும். இத்தகையோரிடம் இந்து மதம் எவ்வளவு படிந்திருக்குமென்பதை ஆஸ்திகர்களறியட்டும்.

சுபம்!

எம். என். சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

538

# இதுவும்காலவித்தியாஸமா.

ஆர்யர்களே! இப்பாதகண்டம் தோன்றியது இன்றல்ல. நேற்றல்ல அநேககண்டங்களும் அவ்விதமேதானுயினும் இப்பாதகண்டத்திற்கு மட்டிலும் ஏற்பட்ட மகிமையை அளவிடமுடியாது. புராணங்கள் 18-ம் வேதங்களில் பல பாகங்களும் இக்கண்டத்தையே பெருமைப்படுத்திப் புகழ்கின்றன. இப்புகழுக்குக் காரணம் இதன் மண்ணு, ஜலமா, மனிதர்களா, மிருகங்களா என்னென்று நிச்சயிப்பது. ஏதோ ஓர் அஸாதாரணமான காரணமிருந்தே தீரவேண்டும். அதைச் சுருங்கச்சொன்னால் அநுதிசித்தமான ஆர்யமதம் நிலைபெற்று வழங்கி வருவது என்றுதான் கூறலாம். மற்றய மதங்கள் உண்டானகாலம். அவரவர்களின் மத சரித்திரமே கூறிக்கொண்டிருக்கிறது. நம் மதத்திற்குக் காலவரை இல்லாததால் அதைக் கூற ஒருவரும் முன் வரவில்லை. எல்லோரும் மதப்பற்றால் பகவானை வழிபடுவதே தொழிலென்றும் மதத்தாலேயே சகல காரியங்களையும் அடையலாமென்றும் ஸத்தியமாய் நம்பி அம்மதத்தை பக்தியுடன் நடத்தினார்கள். இதற்காகவே நமக்கு ராமாயணம் முதலிய பல அறிய இதிகாஸ புராணங்கள் தோன்றிப் பிரகாசிக்கின்றன. விசுவாமித்திரர் பௌருஷத்தால் வசிஷ்டருக்குப் பெரியோர் என்ற மகிமை வைக்காமல் அவரை அவமானம் செய்து அவர் பேரில் பாணவர்ஷங்களைப் பொழிய அவர் சாந்தியென்ற ஸ்வரூபத்தைக் காட்டக் கூடிய பிர்மதண்டமென்ற தர்ப்பத்தைத் தன் முன்னிலையில் ஊன்றினர். அப்போது விசுவாமித்திருடைய வீராவேசத்துடன் சீறி விழும் பாணம் யாவற்றும் பிர்மதண்டத்தின் முன்னிலையில் வேகம் குன்றி சாந்தமாய் விழுந்தன. ஸ்ரீ ராமர் ரிஷிகளையும் பிதாவையும் போற்றி வணக்கம், சத்தியம், தெய்வபக்தி, முதலியன தான் எல்லா ஸித்தியையும் நிகரில்லாமற் கொடுக்குமென்பதைக் காட்டவே அழியக் கூடியதென்று ராஜ்யத்தையும் உதறிவிட்டுக் காடேகி பிதிர் வாக்ய பரிபாலனமும் ரிஷிகளின் க்ஷேமத்தில் கைங்கர்யத்தையும் கண்ணும் கருத்துமாக நடத்தி வந்ததனுல் அகஸ்தியரிடமிருந்து திவ்யாஸ்திரங்கள் பெற்றூர். ஒருவாாக நின்று மனிதர்களை அலக்ஷ்யமாய் விழுங்கும் 14-ஆயிரம் கரதூஷணர்களை வென்றூர் வாலியை பலத்தினுல் கொழுத்தவன் தர்மசூக்ஷ்மமறியாதவன் இவனுல் உலகம் நடைபெறுதென்று கொண்டு அவனை அடித்துக்

கடைசியில் அவன் ஒப்புக்கொள்ளும்படி தர்மோபதேசம் செய்தார். தர்மிஷ்டனான சுக்ரீவனை ஸ்தாபித்தார். அவ்விதமே கொழுத்த ராவணன் வேண்டாமென்று துலைத்து பகவத்பக்தியைக் கைக்கொண்ட விபீஷணனை ஸ்தாபித்தார். இவ்விதமே பாரதத்திலும் பலம் பிரயோஜனமில்லை. தெய்வபக்தியும் ஆஸ்திக்யமும்தான் கடைத்தேறச் செய்வதென்றெண்ணிய தர்மபுத்திராதிகள் காட்டுக்குப்போய் கஷ்டப்பட்டதையும் பிறகு சுகமடைந்ததையும் ராஜ்யத்தில் சுகமாய் உட்கார்ந்துகொண்டு அட்டூழியம் அனீதிகளைச் செலுத்திவந்தவர்களுமான துர்யோதனாதிகள் அடிமாண்டதையும் விளக்குகிறது.

இன்னும் எந்தப் புராணத்தை எடுத்தாலும் தெய்வபக்தியையும் ஸத்தியத்தையுமே புகழ்கிறதே தவிர வேறு எதைச் சொல்லுகிறது. இதையே நம் தேசத்தில் அனாதிகாலமாய் ஸ்திரீ புருஷர்கள் யாவருக்கும் எளிதாய் அவரவர்களுக்கு வேண்டியவாறு கற்பிப்பது வழக்கம். குழந்தைப்பர்வத்திலேயே பாரத ராமாயணாதிகளின் கதையைக் கொஞ்சம் கொஞ்சமாய் கற்பித்து விடுவார்கள். இவ்விதம் மற்றெந்தக் கண்டத்திலுமில்லை. இங்கு என்றுமுளதென்று கொண்டே பகவத் ஸான்னித்தியமும் க்ஷேத்திரங்களும் ஏராளமாய் ஏற்பட்டிருக்கின்றன. வளர்ப்பானேன் காலம்சென்ற மாக்ஷிமை தங்கிய நம் மஹாராணியவர்கள் ஒரு சமயம் தன் மனதிலுள்ளதைக் கூறும்போது இங்கிலாந்துக்கு அரசியாயிருப்பதில் தனக்கு கௌரவமில்லை. இந்தியாவுக்கு சக்கரவர்த்தினி என்று பெயரால் அழைக்கப்பெற்றதே என் பெரும் பாக்கியம் எனறு சொன்னதாய்க் கூறுவார்கள். இவ்வித மகிமை என்றும் தழைத்தோங்கும்படி அனாதிஸித்தமாய் ஏற்பட்ட வரம்பு எதனாலென்றால் ஒவ்வொரு மனிதனும் தன் நிலையில் இருந்துகொண்டு நேசபாவத்துடனிருந்ததே காரணம். ஒவ்வொருவனும் தான் செய்யும்வேலை அவனவனைச் சார்ந்தது அத்தொழில் நமக்கல்லவென்றே மற்றவர்கள் ஒதுங்கி இருந்தனர். உதாரணமாய் பிராமணன் வேதம் கற்றுக்கற்பித்து யாகம் செய்து செய்வித்துத் தானம் செய்து பெற்றும் ஜீவித்தான். க்ஷத்திரியன் வேதம் கற்று தானம் செய்து ராஜ்ய பரிபாலனம் செய்து யாகம் செய்தும் வந்தான். வைசியன் வியாபாரம் முதலியன கவனித்தான். நான்காம் வருணத்தவன் வீடு கட்டும் தொழில்

வாத்தியம் வாசித்தல் முதலியஎண்ணிறந்த தொழில்களால்முதல் மூவருக்குத் திருப்தி செய்வது. இவ்விதமெல்லாமிருந்தது இப்போது அந்நியமம் பறந்துவிட்டது. வேதம்கற்பதுதான் மேலென்றெண்ணிப் பார்ப்பான் செய்வதை நானும் செய்கிறேனென்று நான்காம் வருணத்தவன் வேதியனை எதிர்த்தான். வேதியன் வெளியேறி நான் வியாபாரம் செய்கிறேனென்று கடைகளை வைத்தான். அன்னவிக்ரயம் செய்து நான்காவது ஐந்தாவது வருணத்தவர்கட்கு அறுசுவையுடன் அன்னமிட்டுப் பரிமாறி, அவனை அகமகிழச்செய்து அதனல் கிடைக்கும் பணத்தால் தேகம் பூரித்து ½ நாழிகை பணக்காரனுய் தெய்வத்தை மறந்து ராக்ஷஸனுய் அட்டகாஸம் செய்துவிட்டு பிறகு இருந்தவிடமே தெரியாமலே பணம் வந்தவழியே சென்றுவிடுவதால் தானும் சொல்லாமலோடி வம்சத்தைப் பாழாக்கிப் படுகுழியில் சந்ததியையும் தள்ளிவிட்டுப் போய்விடுகிறுன். இவ்விதம் சீர் குலைந்து சிதைப்பட்டுப் போன வர்ணதர்மத்தை மீண்டும் புனருத்தாரணம் செய்ய மஹான் எப்போது வரப்போகிறுர், எப்போது இன்னுடு முன்னுடாகுமென்று தவித்துக் கொண்டு உலை நீராய் தத்தளிக்கும் ஆஸ்திகர்கள் முன்னிலையில் ஆர்யஸமாஜம் என்றும் பிர்மஸமாஜமென்றும் சுத்திசங்காத்தனென்றும் இந்துமஹாஸபையென்றும் பல பல நெருப்பு மழைகளை பெய்துகொண்டிருக்கும் போது இவைகளை அடக்க யார் வருவார்களென்ற கவலை மேலிட்டது. இச்சமயத்தில் திருவாரூரில் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 10-வது வருஷக் கூட்டம் நடந்ததாகவும் அதில் அநேக லௌகிககர்கள் பற்பல விடங்களிலிருந்து ஏராளமாய் வந்திருந்தனரென்றும் அவ்வமயம் திருச்சினுப்பள்ளி ஸ்ரீமான் ஏ. வி. கோபாலாசார்யஸ்வாமி எம்.ஏ பி.எல். வக்கில் அக்கிராஸனம் வகித்தாரென்றும் 1—9—27 வியாழக்கிழமை மித்திரனில் விஸ்தாரமாய் வரையப்பட்டிருக்கிறது. அதில் அக்கிராஸனம் வகித்த ஸ்ரீமான் ஏ. வி, கோபாலாசார் செய்த உபன்யாஸம் விரிவாகவிருக்கிறது. அதைக் கவனிக்கவே இவ்வியாஸம் எழுதலானேன். இனி அவரது விஷயத்தைத் தெரிவிக்கிறேன்.

இங்கு கோபாலாசார் ஸ்வாமி அக்கிராஸனர் முகவுரைப் பிரசங்கத்தில் வர வர மதவிஷயங்களில் சிரத்தைக்குறைவு ஜனங்களுக்கேற்படுகிறதென்றும் நிர்ப்பந்தத்தின் பேரிலும் தாக்ஷிண்யத்

தின்பேரிலும் ஜனங்கள் வருகிறார்களே ஒழிய மதத்திலிருக்கும் ஓர் அபிமானத்தினால் மட்டும் வருகிறதில்லையென்றும் இதற்குக் காரணம் கலிகாலம நமது துஷ்காலமென்றும் காலத்திற்குத் தகுந்தபடி நமது மதத்தைப் பரவும்படி செய்யவேண்டுமென்றும் மதத்திலிருக்கும் முக்கியமான அமசங்களைக் குறைக்காமல் சாதாரண அம்சங்களைக் குறைத்துவிட வேண்டுமென்றும் முன்காலத்தில் நம் பெரியோர்களுக்குக் கடலில் செல்லும் பழக்கம் பூமியில் செல்வதைவிட அதிகம் தெரிந்திருந்ததென்றும் அதற்கு உதாரணமாக இந்த ஸம்ஸார சமுத்திரத்தைக் கடந்து செல்வதற்கு ஈசுவரனுடைய அருள் என்றும் கப்பலைக்கொண்டு கடந்து செல்லும் விஷயமாக நமது ஆசார்யர்கள் வர்ணித்திருக்கும் மாதிரியைப் பார்த்தால் இப்போது தேர்ச்சிபெற்ற மாலுமிகளுக்குள்ள கடலில் கப்பலோட்டும் ஞானத்தை விட அதிகமாகவே இருந்திருக்கிறதென்றும் மாலுமிகளுக்கு எப்படிகாப்டன்என்று பெயருள்ளதோ அப்படிப்போல் நமது ஆசார்யர்களுக்கும் கர்ணதாரர்கள் என்று பெயருண்டென்றும் முக்கியமாக இந்தக்காலத்தில்எங்கும் ஸமத்வம் பாராட்ட வேண்டுமென்றும் ஸ்ரீ கீதாசார்யன் உபதேசித்தருளிய ஸமத்துவத்தையே நாம் கைக்கொள்ளவேண்டுமென்றும் கீதையில் சொல்லிய ஸமத்வ தரிசனமே ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தத்தில் முக்கியமான அம்சமென்றும் அதைக் கொண்டு ஒருவரிடமும் த்வேஷ புத்தி பாராட்டாமல் ஜாதிபேதமன்னியில் நமது பழைய அனாவசியமான குருட்டுப் பழக்கங்களை விட்டுவிட வேண்டுமென்றும் அப்படிச் செய்தால்தான் நம்முடைய மதம் நிலைபெற்று நிற்குமென்றும் அதன் மூலமாக ஹிந்துக்களாகிய நாம் கடைத்தேறலாமென்றும் முடித்தார். பிறகு கடைமொழியிலும் தீண்டாமையைப்பற்றி நமது மதத்தில் தனக்குத்தெரிந்தவரையில் கொஞ்சங்கூட இடங்கொடுக்கவில்லையென்றும் அத்வைதாசார்யர்கள் சிற்சிலவிடங்களில்தீண்டாமையென்னும் ஓர்சாராரை விலக்கவேண்டுமென்று சொல்லாமல் பஞ்சமர்கள் இதா வர்ணத்தார்களுக்குக் கீழ்ப்பட்டவர்களல்லவென்றும்செய்கையினால்தான் ஒவ்வொருவரும் மேன்மையையோ, அல்லது தாழ்மையையோ அடைவார்களே தவிர பிறப்பபினால்அடைவதில்லையென்றும்அப்பயதீக்ஷிதர் ஒருஇடத்தில் ஒரு ஸந்தர்ப்பத்தில் பஞ்சமர்களுடன் கூட புசிக்கலாமென்று சொல்லியிருப்பதாகவும் நமது வைஷ்ணவ

மதத்திலோ பஞ்சமர்களென்று கொஞ்சங்கூட வித்யாஸம் பாரா ட்டுகிறதில்லையென்பதற்கு நமது மதஸ்தாபகரான ஸ்ரீ ராமாநுஜர் கோவில் சிகரத்தில் நின்றுகொண்டு பஞ்சமர்களுள்பட எல்லோ ருக்கும மந்திரோபதேசம் செய்ததே பெரிய உதாரணமாகுமெ ன்றும் ஆகையால் நாம் தீண்டாமையை அவசியம் ஒழித்துவிட வேண்டுமென்றும்அப்பொழுதுதான் நமக்கு க்ஷேமம் உண்டென் றும் முடித்துவிட்டார். இனி இவ்விஷயத்தை நாம் கவனிப்பாம்.

முற்கூறியவாறு கூறியிருக்கும் ஸ்ரீமான் ஏ. வி. கோபாலா சார் அவர்களை நான் தெரிந்துகொண்டவன். அவர்களுக்கு லௌ கிகப் பெயர்போல் சாஸ்திர பரிசயமுள்ளவரென்றும் பிராமாணி கரென்றும் பிரஸித்திபெற்றவர். ஆகவே அத்தகையார் இம் மாதிரி கூறியிருப்பார்களா வென்று சங்கை மிகவும் மேலிடுகிறது. சொல்லாததைப் பத்திரிகையிற் பிரசுரம் செய்யலாமாவென்றும் தோன்றுகிறது. எவ்விதமாயினும் ஸ்ரீமான் ஆசார்யர் சொன்ன தாகவே வைத்துத் தான் இங்கு இறங்கவேண்டிவருகிறது.

இவ்விதம் ஆசார்யார் கூறியிருப்பதைப் பார்த்தால் சாஸ்தி ரக்ஞனை ஆஸ்திகன் யாரும் திகைப்பான். இவரே இவ்விதம் சொல்லலாமாவென்று பிரமிப்பான். காலம் மேலானதென்று வருந்துவான். ஸாமான்யமாய் மதவாஸனையே இல்லாமல் உல கததாரால் ஏதோ காரணத்தால் போற்றப் பெற்றவர்கள் மதவிஷ யத்தில் தலையிட்டுக்கொண்டு கலக்குவதே பெரியோர்களின் மன தைப் புண்படுத்தும்போது ஆசார்யாது வசனம் நம்போன்றவர்க ளின் உயிர் நிலையை அறுக்கததான் செய்கிறது.

நம்மதத்தில் ஆராய்ந்து பார்த்தமட்டில் தீண்டாமையென் பது கிடையாதென்றும் இப்படியிருப்பதாக எனக்கு நிரூபித் துக் காட்டினல் நான் இம்மதத்தையே விட்டுவிட ஸித்தமாக இருக்கிறேன் என்றும் இன்னும் பலவாறெல்லாம் பங்களூரில் பிரிவு உபசாரம் நடந்தபோது காந்தி கூறியதாய் 29—8—27 திங்கட்கிழமை மித்திரனில் படித்துப் பார்த்தபோது எனக்கு அவ்வளாகத் துயரம் உதிக்கவில்லை. மற்று நல்ல ஆஸ்திகன் யாராவதொருவன் நிரூபித்துக் காட்டமாட்டானு. அதன் மூலம் காந்தி நம்மதத்தை விட்டு விலகி விடலாமே. உடனே அவரது பக்தர்களும் அவ்விதம் செய்வார்களே. பிறகு அவர் நம்மதத தைப்பற்றிப் பேசவேமாட்டாரே. இதன் பிறகு நம் மதத்திற்கு

க்ஷேமம் ஏற்படலாமே என்றெண்ணினேன். இங்கு ஆசார்யர் அதேமொழியைத் திருப்பி ஒப்பித்திருப்பதைப் பார்க்கும்போது மட்டிலும் மனம் சலிக்கிறது இருக்கட்டும். அதை அடக்கிக் கொண்டு இதைக் கேட்கிறேன். (தொடரும்)

M. N. சுப்ரமணியசாஸ்திரிகள்.

---

# ஹிந்துமதத்தின் உண்மையும் மேன்மையும்.

இவ்விரிந்த உலகில் எவ்வளவோ மதங்கள் தழைத்தோங்குகின்றன. கிறிஸ்துமதம், ஹிந்துமதம், புத்தமதம், இஸ்லாம், இவைகள் அவைகளில் முக்கியமானவைகள். இந்த மதங்களை ஏராளமான பேர்கள் கைக்கொண்டிருக்கின்றனர். இவைகளைத் தவிர பல சிறிய மதங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மதங்களிலும் எவ்வளவோ பிரிவுகள் இருக்கின்றன. உதாரணமாக கிறிஸ்துவ மதத்தில் "ரோமன் கதோலிக், ப்ராடஸ்டன்ட்" என்ற இரண்டு பிரிவுகள் உண்டு. "ப்ராடஸ்டன்ட்" பிரிவுக்குள்ளேயே "ப்யூரிடன்ஸ்" என்ற ஒரு மதம் பிரிகிறது. புத்தமதத்தில் ஸிலோன் தேசத்தவர்கள் தென்பிரிவு என்றும் சைனு, ஜப்பான் முதலிய தேசத்தவர்கள் வடபிரிவு என்றும் அழைக்கப்படுகின்றனர். ஹிந்துமதத்திலும் அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம், என்றும், சைவம், வைஷ்ணவம் என்றும் பிரிவுகள் இருக்கின்றன. இவைகளில் ஒவ்வொரு மதமும் ஒவ்வொருவரால் ஸ்தாபிக்கப்பட்டு, பின்வந்தவர்களால் பரவச்செய்யப்பட்டது; ஆனல் நம் புராதன ஹிந்துமதமோ ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்டதல்ல. ஒருவராலும் பரவச்செய்யப்படவுமில்லை. நம் வேதங்கள் அநாதியானது; ஒருவர் எழுதியதல்ல; நாம் 'ஹிந்து' என்று பெருமைபாராட்டுகின்றோம், ஆனல்பலர் நம் மதக்கொள்கைகளையே அறிவதில்லை; பிற மதஸ்தர்கள் பணத்தினுலும் மற்ற பல வழிகளாலும் நம்மில் பலரை அவர்கள் மதத்தில் சேர்க்க வரும்பொழுது தம் மதத்தின் பெருமையையே அறியாமல் அன்யமதமென்றும் குழியில் விழுகிறார்கள்.

(2) நம்மதத்தில் உண்மையில்லாமற்போனலல்லவா நாம் பிறமதத்திற்குச்செல்லவேண்டும். ஆனல் மதத்வேஷம் கூடாது தன் மதமே உண்மையென்றும் பிற மதங்கள் பொய் என்றும் கூறுவது மஹா பாபம். ஸர்வ ஸமயங்களும் கடவுளை நோக்கிச் செல்லும் மார்க்கங்களே, ஒரு மலையின் உச்சிக்குச்செல்ல, மலை அடிவாரத்திலுள்ள பல கிராமங்களிலிருந்து வெவ்வேறு வழிகள் உள. ஒவ்வொரு கிராமமும் தன்தன் வழியையே சௌகரிய மாக நினைக்கிறது. இதையே கீதையில்
என்று சொல்லியிருக்கிறர். நம் ஹிந்து மதத்தில் மற்ற எல்லா மதக்கொள்கைகளும் அடங்கியுள்ளன. இதை விளக்க எல்லா மதங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

(1) கிறிஸ்தவமதம்:— கிறிஸ்துவின் சிஷ்யர்கள் என்று சொல்லிக்கொண்டு அவர் உபதேசப்படி எள்ளளவேனும் அனு ஷ்டிக்காதவர்களை நாம் பகைக்கவேண்டியிருக்க, மதத்தின் மூல புருஷரான கிறிஸ்துவை என் பகைக்கிறேம். கிறிஸ்து ஒரு பெரிய மஹான். அவதார புருஷர். தன் உயிரைத் துரும்பாயெண்ணிய உத்தமர் இப்பொழுது கிறிஸ்து பெயரால் அழைக்கப் படும் மதம், ஸ்வாமி ராமதீர்த்தர் சொல்வதுபோல் ‘சர்ச்மதமே” (Churchianity) ஆகும். நாம்கிறிஸ்துவால் கூறப்பட்ட சில தர்மங் களையனுஷ்டித்து வருகிறேம். இதை ரூபிக்க கிறிஸ்து மதக் கொள்கைகளில் சிலவற்றை ஆராய்வோம்.

1. கிறிஸ்து ஓரிடத்தில் ‘ஒருவன் உன்னை வலது கன்னத் திலடித்தால், இடது கன்னத்தையும் காட்டு (If a man strikes-you in the right chin, show him the left also) என்று கூறி யுள்ளார். அபஹாரம் செய்தவனுக்கும் தீங்கு நினைக்கக்கூடாது என்பதை இது விளக்குகின்றது.

2. ‘தர்மத்தின் மேன்மையைப் பற்றியும் ‘தர்மம் வீணகாது என்பதைப் பற்றியும் கூறுவதாவது ‘உன் ரொட்டியை ஆற்றில் எறி. சில நாட்களுக்குப் பிறகு அது உன்னிடமே வந்து சேரும் “Cast your bread on water and it will return to you after some day’s)

3. துஸ்ஸங்கத்தின் கெடுதலைப் பற்றி ‘நாஸ்திகர் கூட்டத் தில் நடவாமலும் பாபிகள் மத்தியில் உட்காரமலும் இருக்கிறவர் உத்தமர்’ (Blessed are those tbat do not walk in the

council of the ungodly nor sittith in the midst of simmers)

4. பணத்தின் மேலுள்ள ஆசையால் மோக்ஷமடைய முடியாது. "ஒரு பணக்காரன் கடவுளை அடைவதைக் காட்டிலும் ஒரு ஒட்டகங்களின் வரிசை ஒரு ஊசியின் காதுக்குள் நுழைந்து செல்வது சுலபம் (It is easter for a string of Cammels to pass the rough a needles eye than for a rich man to obtain Heaven)

சுவாமி ராமதீர்த்தர் சொல்வதுபோல் கிறிஸ்துவையும் அவர் கொள்கைகளையும் ஆசியா கண்டத்தவர்களான நாம் நன்ருய் அர்த்தம் புரியலாம். ஏனென்ருல் கிறிஸ்து ஆசியாகண்டத்தில் பிறந்தவரே, சில அத்வைதக் கொள்கைகளும் அதில் அடங்கியிருக்கின்றன. ஆனுல் அதன் உள்ளார்த்தத்தை மேல் நாட்டார்கள் அறியவில்லை. அத்வைத மதத்தில் सोऽहम् ஸோऽஹம் என்பது போல் கிறிஸ்து மதத்தில் "நானும் என் தந்தையும் என்றே" (I and my Father are one) "தனயனைக் கண்டவன் தந்தையையும் கண்டவனே (He who hath seen the son hath seen the father) என்றவைகள் காணப்படுகின்றன.

(2) புத்தமதம்:— உலகத்தில் இது ஒரு பிரபலமானமதம் இது பிறந்தவிடம் நம் தேசமே. ஆனுல் வர வர அது மிகவும் நாஸ்திக மதமானபடியினுல் சங்கராசாரியார் முதலியவர்கள் அதைக் கண்டித்தார். புத்தரின் ஜீவர்களிடத்துள்ள கருணையும் இவ்வுலகத்துத் தர்புத்தியை ஒழிக்க ஒரு மார்க்கம் கண்டு பிடிக்கப்பட்ட கஷ்டமும் மெச்சத் தகுந்தவை. இதன் முக்கிய கொள்கைகள். 1. ஜீவகாருண்யம், 2. ஆசையினின்றும் ஒழிவு. இங்கிலாந்து, சைனு, ஜபான் முதலிய இடங்களில் இவைகள் அவ்வளவு நன்ருய் அனுஷ்டிக்கப்படுவதில்லை. ஆனுல் அஹிம்ஸை நம் மதத்தின் முக்கியமான கொள்கை. ஆதலால் நாம் புத்தமதஸ்தன் என்ற பெயரில்லாமலே புத்தரை பின்தொடருகிரும். இரண்டாவது கொள்கையானது நமக்கு ஒரு ஸாதனமாகவே உள்ளது.

इहामुत्रार्थफलभोगविरागोद्वितीयकम् ।

இஹாமுத்ரார்த்தபலபோகவிராகோத்விதீயகம் ।

புத்தமதத்தின் கடைசி நிலையும் நிர்வாணநிலையே.

புத்தமதம் கிறிஸ்துமதம் இவ்விரண்டிலும் 'விக்ரஹ பூஜை, கண்டிக்கப்படுகிறது. விக்ரஹ ஆராதனை கடவுளை அடைய முதற்படி விக்ரஹங்களை நாம் தெய்வமாகவே கருதுகிறோம். விக்ரஹத்தை தெய்வமாகக் கருதலாமேயன்றி தெய்வத்தை விக்ரகமாக கருதக் கூடாது. ஆனால் இவ்விரண்டு மதங்களிலுல் விக்ரக பூஜை இல்லையா ? கிறிஸ்து மதத்தில் முக்கியமாக ரோமன்கத்தோலிக் பிரிவைச் சேர்ந்தவர்கள் பல "ஸெயிண்ட்ஸ்" (Saints) எனப்படும். புண்யபுருஷர்களின் சிலைகளையும், கிறிஸ்துவின் தாயாகிய 'வர்ஜின்மேரி' (Virgin Mary) யின் சிலையையும் தொழுகின்றனர். விக்ரக ஆராதனையைக் கண்டித்த புத்தரையே அவர் இறந்த சில வருஷங்களுக்குள் விக்ரஹமாக ஆராதிக்கத் தொடங்கி விட்டனர்.

(3) இஸ்லாம்:— இது முஹம்மது என்றவரால் கண்டு பிடிக்கப்பட்டது. இஸ்லாம் மதத்தில் பிறந்து ஹிந்து மதத்தை அனுஷ்டித்த கபீர் என்னும் பக்தர் சொல்லுகிறார்.

"ஹரி கிழக்கே, இருக்கிறார். அல்லா மேற்கே இருக்கிறார். உன் ஹிருதயத்திற்குள் இருவரையும் காண்பாய்"

இஸ்லாம் மதத்தில் ஜீவகாருண்யமே இல்லையென்று சிலர் சொல்லலாம். ஆனால் முஹம்மதியர்கள் மெக்கா முதலியபுண்ணிய க்ஷேத்ரங்களுக்குயாத்திரைபுரியும்போது குளிக்கவும், வேஷ்டி சுத்தப்படுத்தவும் கூடாது எனத் தோற்றுகிறது. இதற்குக் காரணம்தேகத்திலும், வேஷ்டியிலுமுள்ள கிருமிகள் இறக்கக்கூடாது என்பதே.

இவ்விதம் உலகிலுள்ள முக்கியமான மதங்களை ஆராய்ந்து ஒவ்வொன்றிற்குமுள்ள ஒற்றுமையையும் கண்டோம். இங்ஙனம் எல்லா மதங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கும் நம் ஹிந்து மதத்தின் பெருமையை பலரறியாமல். மேல்நாட்டு நாகரீகம் என்னும் குழியில் கண்ணை மூடிக்கொண்டு விழுகிறார்கள் சில வருஷங்களுக்கு முன்பு மேல்நாட்டு நாகரீகத்திற்கு முக்கிய இருப்பிடமான கல்கத்தாவுக்குச்சமீபத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸதேவர் என்ற மஹான் அவதாரம் செய்து ஸனாதனதர்மத்தை நிலை நாட்டினார். அவர் சிஷ்யரான சுவாமி விவேகானந்தர் சிகாகோ சர்வமத மஹாசபையிலும் அமெரிக்கா, இங்கிலாந்து' முதலிய இடங்களில் செய்த பிரசங்கங்களாலும், இந்தியாவின்

பெருமையும், ஹிந்து ஸனாதனதர்மத்தையும், உலகம் அறியச் செய்தார்.

ஆகையால் உலகிலுள்ள எல்லாமதங்களைப்போல் ஒருவர் கண்டு பிடித்தாரென்று சொல்லக் கூடாத अपौरुषेय மான ஹிந்து மதத்தின் உண்மையை அறிதல் அவசியம். எல்லாம் ஒரே பொருள் கடைசியில் மிஞ்சக்கூடியதும் ஒன்றே. இதையே

यं शैवास्समुपासतेशिव इति ब्रह्मेति वेदान्तिनः
शाक्ताश्शक्तिरिति प्रमाणपटवः कर्मेति मीमांसकाः ॥

யம் ஶைவாஸ்ஸமுபாஸதே ஶிவ இதி ப்ரஹ்மேதி வேதாந்தின:।
ஶாக்தாஶ்ஶக்திரிதி ப்ரமாணபடவ: கர்மேதி மீமாம்ஸகா: ॥

என்ற சுலோகத்தினல் பலரால் பலவிதமான தேவர்களாகக் கொண்டாடப்படுகிறவன் நாஞெருவனே, எப்படி ஒரே சூரியன் ஜலத்தில் அலைகளில் பல பிரதிபிம்பங்களாகக் காணப்படுகின்றதோ அதேமாதிரி நாஞெருவன் என்று சொல்லியிருக்கிறார் மேலும்

स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ।

ஸ்வதர்மே நிதனம் ஶ்ரேய: பரதர்மோ பயாவஹ: ।

என்ற சுலோகத்தினல் பிற தர்மத்தில் வாழ்வதைக் காட்டிலும் தன் தர்மத்தில் சிரமப்படுவது கூட நலம் என்று சொல்லப்படுகிறது. பிறமதத்தில் உள்ளவர்களை நம் மதத்தில் சேரும்படியும் நாம் சொல்வதில்லை. அப்படி இதர மதங்களாகிற சிறிய நதிகளுக்கு ஸமுத்திரம் போல் விளங்கும் நம் ஹிந்துமதத்தில் பலவிதமான தர்மங்களை ஸ்மிருதிகள் மூலமாய் உபதேசம் செய்த மஹான்களான, மனு முதலிய ஆரியர்களின் தர்ம உபதேசங்களை நாம் அனுஸரிப்போமாக.

மேலும் நம்மதத்தின் பெருமையானது கலியாகிய கிரகத்தினல் பீடிக்கப்பட்டிருந்தபோதிலும் ஸர்வாந்தர்யாமியாகிய பகவான் அதை மறுபடியும் முன் யுகங்களிலிருந்த மேன்மையான நிலைமையையே அடையும்படி செய்வாரென்று ஈசுவரனைப் பிரார்த்திப்போமாக.

அதை எல்லோருக்கும் உபதேசிக்கும் ஆரியதர்மத்திற்கும் நம் கிருதக்ஞதையை தெரிவிப்போமாக.

T. R. ராமநாதசாஸ்திரி.

548

# ஸ்திரீ தர்மம்.

உலகில் விருக்ஷ பக்ஷி மிருக மனித வர்க்கங்களுள் ஆண், பெண் என்ற இரு பெரும் பிரிவு காணப்படுகிறது. இவ்விரு வகுப்பினரின் முக்கிய கார்யம் தங்கள் இனங்களை விருத்திசெய்வதே எனத்தோன்றுகிறது. அதாவது இருவரும்கூடி தங்களைப்போன்ற உருக்கொண்ட உடல்களை சிருஷ்டித்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் பிரஜோத்பத்தி செய்வதற்காகவே சரீரத்தை வளர்ப்பதென்றால், அதற்காகவே அன்னம் (ஆஹாரம்) புசிக்க வேண்டியிருக்கிறது. ஆகாரம் தேடுவதற்காகவே, உடல் பல துறைகளிலும் வேலை செய்யவேண்டியிருக்கிறது.

இதையே புரட்டிப்பார்த்தால், நெற்றி வியர்வை நிலத்தில் விழ உடலை ஒடித்து உழைக்கிறோம். பணம் ஸம்பாதிக்கிறோம். பணத்தின் பெருமைதான என்ன? பணம் உணவுப்பொருளையும் உடைப்பொருளையும் வாங்கக் கூடிய ஒரு நாணயப்பொருள் தான். (பணக்காரர்கள் இந்த உண்மை அறியாமல் பணப்பையாக விளங்குகிறார்கள்.) பணம் வாழ்வின் நோக்கலில் பணத்தைக் கொண்டு வாழ்வின் குறிக்கோள்களைப் பெற்று இங்கும் அங்கும் எங்கும் ஸுகம் பெறலாம். இந்த உழைத்தெடுத்த தனத்தைக்கொண்டு ஊண், உடை, பெறுகிறோம். ஊணைத்தின்று உடலை வளர்க்கிறோம். உடையை (வஸ்திரம், ஆபரணம் முதலிய அணிகளை)க்கொண்டு சோற்றால் வளர்த்த உடலைப்போர்த்து முன் அழகும் பின் அழகும் பார்க்கிறோம். களிக்கிறோம், ஆடுகிறோம், பாடுகிறோம், ஆநந்தக் கூத்தாடுகிறோம்.
சொன்னார் ஒரு பக்தர்,

"உன்னை அலங்கரித்து உன்னைப் பாராமல்
என்னை அலங்கரித்து என்னழகைப் பார்த்துநின்றேன்
பராபரமே"

என்றுரைத்த பக்தர் பரவசம். (இன்னும் வரும்.)

ஸாரம் ரங்கசாரியார்.